# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## OS.No.94/2021

| | | |
|---|---|---|
| Name | : | திரு. முனீஸ்வரன் **Pw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of February 2026.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி கல்வி அறக்கட்டளை நிர்வாக மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 12 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) 20.10.1999 ம்தேதிய வழக்கு தொகுப்புரை 1வது அட்டவணை சொத்துக்களில் ஒரு பகுதி சொத்துக்களை பொறுத்த தமிழ்த்தாய் அறக்கட்டளையின் பெயரிலுள்ள பதிவுபெற்ற விலை ஆவணத்தின்

சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.1 ஆகும். 2) 22.10.1999ம் தேதிய வழக்கு தொகுப்புரை 1வது அட்டவணை சொத்துக்களில் ஒரு பகுதி சொத்துக்களை பொறுத்த தமிழ்த்தாய் அறக்கட்டளையின் பெயரிலுள்ள பதிவுபெற்ற விலை ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகும். 3) 25.10.1999ம் தேதிய வழக்கு தொகுப்புரை 1வது அட்டவணை சொத்துக்களில் ஒரு பகுதி சொத்துக்களை பொறுத்த தமிழ்த்தாய் அறக்கட்டளையின் பெயரிலுள்ள பதிவுபெற்ற விலை ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகும். 4) 02.12.1999ம் தேதிய வழக்கு தொகுப்புரை 1வது அட்டவணை சொத்துக்களில் ஒரு பகுதி சொத்துக்களை பொறுத்த தமிழ்த்தாய் அறக்கட்டளையின் பெயரிலுள்ள பதிவுபெற்ற விலை ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.4 ஆகும். 5) 03.04.1992ம் தேதிய வழக்கு தொகுப்புரை 1வது அட்டவணை சொத்துக்களை பொறுத்த தமிழ்த்தாய் அறக்கட்டளையானது அதன் தலைவர மூலம் த.சீனிச்சாமித்தேவர் அவர்கள் குமாரர் சீ.முத்துத்துரை அவர்களை பொது அதிகாரம் பெற்ற முகவராக நியமனம் செய்து எழுதிக்கொடுக்கப்பட்ட பதிவுபெற்ற பொது அதிகார ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.5 ஆகும். 6) 26.08.2002ம் தேதிய வழக்கு தொகுப்புரை 1வது அட்டவணை சொத்துக்களை ராஜாத்தி அவர்கள் தமிழ்த்தாய் அறக்கட்டளையிடமிருநது அதன் பொது அதிகாரம் பெற்ற முகவர மூலம் கிரையம் பெறற விலை ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.6 ஆகும். 7) 21.05.2008ம் தேதிய வழக்கு தொகுப்புரை 1வது அட்டவணை சொத்துக்களை பா. முத்துக்குமாரசாமி அவர்கள் ராஜாத்தி அவர்களிடமிருந்து கிரையம் பெற்ற பதிவு பெற்ற விலை ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.7 ஆகும். 8) வழக்கு தொகுப்புரை 3வது அட்டவணை சொத்து மற்றும் அதனோடு சேர்ந்த சொத்துக்களை பொறுத்து மகேஸ்வரி அவர்கள் அவருக்காகவும், அவரது இளவர் குமாரத்திகளான இரா.ரதி மற்றும் இரா.வேணி

ஆகியோர்களுக்காக பாதுகாவலர் நிலையிலிருந்து முத்துக்குமாரசாமி அவர்களை அவர்களது பொது அதிகாரம் பெற்ற முகவராக நியமனம் செய்து எழுதிக்கொடுத்த பதிவு பெற்ற பொது அதிகார ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.8 ஆகும். 9) 28.08.2014 ம் தேதிய வழக்கு தொகுப்புரை 1 வது அட்டவணை சொத்துக்களை வழக்கர் பா. முத்துக்குமாரசாமி அவர்களிடமிருந்து கிரையம் பெற்ற பதிவு பெற்ற விலை ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.9 ஆகும். 10) 28.08.2014 வழக்கு தொகுப்புரை 3 வது அட்டவணை சொத்து மற்றும் அதனோடு சேர்ந்த சொத்துக்களை பொறுத்து மகேஸ்வரி மற்றும் அவரது இளவர் குமாரத்தியான இரா. வேணி ஆகியோர்களிடமிருந்து அவர்களது பிரிவின்றி 5/6 பங்கை இந்த வழக்கர் ஷையார்களின் பொது அதிகாரம் பெற்ற முகவரான பா.முத்துக்குமாரசாமி அவர்கள் மூலம் கிரையம் பெற்ற பதிவுசெய்யப்பட்ட விலை ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ. 10 ஆகும். 11) 03.11.2014 ம் தேதிய வழக்கு தொகுப்புரை 3 வது அட்டவணை சொத்து மற்றும் அதனோடு சேர்ந்த சொத்துக்களிலுள்ள மகேஸ்வரி அவர்களின் குமாரத்தி ரதி அவர்களிடமிருந்து அவரது பிரிவின்றி 1/6 பங்கை இந்த வழக்கர் கிரையம் பெற்ற பதிவுசெய்யப்பட்ட விலை ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ. 11 ஆகும். 12) வழக்கர் அறக்கட்டளையினால் வழங்கப்பட்டுள்ள வழக்கில் சாட்சியமளிப்பதற்கான அங்கீகார தீர்மானத்தின் நகல் வா.சா.ஆ. 12 ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

(வா.சா.ஆ.12 ஆவணம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது)

**குறுக்குவிசாரணை இன்று இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi